# ஓசூர் மாநகராட்சி

## மாமன்ற கூட்ட அறிக்கை

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் தேதி திங்கட்கிழமை **பிற்பகல்** 03.00 மணிக்கு **மாமன்ற** சாதாரணக் கூட்டம் மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள **மாமன்ற கூட்ட அரங்கில்** நடைபெறும். எனவே **மாமன்ற உறுப்பினர்கள்** அனைவரும் கூட்டத்தில் தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாமன்ற மேயர்**
ஓசூர் மாநகராட்சி

---

## மாமன்றப் பொருள்

**பொருள் எண் 1**

**<u>மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

5 ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை நடத்த ஆவண செய்து வரலாற்று சாதனை படைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஓசூர் மாமன்றத்தின் சார்பாக கோடான கோடி வாழ்த்துக்களையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு

**பொருள் எண் 2**

**<u>மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

5 ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை சுமூகமாக நல்ல முறையில் நடத்த ஆவண செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகர்ப்புற உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்பைமிகு மாநில தேர்தல் ஆணையத்திற்கும், மாவட்ட தேர்தல் அலுவலருக்கும், தேர்தல் நடத்தும் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் மற்றும் பணியாளர்கள் ஓசூர் மாநகராட்சி அனைவருக்கும் இம்மாமன்றத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு

**பொருள் எண் 3**

**மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

அருள்மிகு சந்திர சூடேஸ்வரர் திருக்கோவிலின் தேர்த்திருவிழா 18.03.2022 அன்று நடைபெறுவதையொட்டி விழாவிற்கு வருகை தரும் பொதுமக்கள் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தவிர்க்கும் படியும், பொது சுகாதாரத்தை பேணிக்காக்கும் படியும் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க கோரியும் தீர்மானம் நிறைவேற்றிட மாமன்றத்தின் அனுமதிக்கு.

**பொருள் எண் 4**

**மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

இம்மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் தற்போது ஓசூர் பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 3.00 ஏக்கர் பரப்பளவில் 52 பேருந்து நிறுத்தும் வசதிகளுடன் 'A' Grade பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. ஓசூர் நகரம் பெங்களூர் மாநகருக்கு அருகில் உள்ளதால் அங்கு பணிபுரியும் பெரும்பாலான பணியாளர்கள் ஓசூரில் குடியிருந்து வருவதாலும் ஓசூர் நகரம் சிறு, குறு தொழிற்சாலைகள் நிறைந்த மாநகராக உள்ளதாலும் அதிகளவில் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் பேருந்து நிலையத்திற்கு வருகை புரிகின்றனர். தற்போது உள்ள பேருந்து நிலையத்தில் தினசரி 700 பேருந்துகள் இயங்கி வருகிறது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதோடு பயணிகளுக்கும் இடையூறு ஏற்படும் வகையில் உள்ளதால் இப்பேருந்து நிலையம் தற்போது உள்ள மக்கள்தொகைக்கும் பேருந்துகள் வருகைக்கும் போதுமானதாக இல்லை.

எனவே தற்போது உள்ள பேருந்து நிலையத்திற்கு மாற்றாக நவீன வசதிகளுடன் கூடிய அதிகளவில் பேருந்துகள் இயக்கக்கூடிய வகையிலும் பயணிகளுக்கு அதிக வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டியது உடனடி அத்தியாவசிய தேவையாக உள்ளது. தற்போது உள்ள பேருந்து

நிலையத்தை நகர பேருந்து நிலையமாக பயன்படுத்தி கொள்ளவும், புதியதாக புறநகர் பேருந்து நிலையம் அமைக்க இடம் வழங்க கோரி அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதிக்கு.

**பொருள் எண் 5**

**மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

ஒசூர் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் அமல்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திட்ட அறிக்கை ரூ.560.00 கோடியில் தயார் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாக தெரியவருகிறது. ஒசூர் நகரம் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருவதாலும் தொழிற்சாலைகள் அதிகளவில் உள்ளதாலும் பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு இத்திட்டத்தை விரைவாக செயல்படுத்த வேண்டியது அவசியமானதாக உள்ளது. எனவே ஒசூர் மாநகராட்சிக்கான பாதாள சாக்கடை திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் வழங்கி பணிகளை துவக்க ஆவண செய்ய அரசை கேட்டுக்கொள்ள மாமன்றம் தீர்மானிக்க ஒப்புதலுக்கு.

**பொருள் எண் 6**

**மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

ஒசூர் மாநகராட்சியில் உள்ள 45 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகளை தூய்மை பணியாளர்களை கொண்டு வீடுவீடாக சென்று தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு மாநகராட்சியால் 6 இடங்களில் பராமரிக்கப்படும் 11 நுண்ணுயிர் செயலாக்க மையங்களில் உரமாக்கப்பட்டு வருகிறது. இவற்றில் ஜுஜுவாடி மற்றும் மூக்கண்டபள்ளி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை அங்கிருந்து சுமார் 5 கி.மீ தூரத்தில் உள்ள நுண்ணுயிர் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது. இதனால் இப்பகுதியில் உள்ள குப்பைகளை அகற்றுவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

மேற்கண்ட இரண்டு பகுதிகளிலும் சேர்த்து சுமார் 1.00 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு தினசரி சுமார் 7.00 டன் மக்கும் குப்பைகள் சேகரமாகி வருகிறது. இவற்றை உரமாக்க இரண்டு நுண்ணுயிர் செயலாக்க மையங்கள் தேவைப்படுகிறது. இப்பகுதியில் சேகரமாகும் குப்பைகளை இப்பகுதியிலேயே நுண்ணுயிர் செயலாக்க மையம் அமைக்கப்பட்டால் குப்பைகளை விரைவாக அகற்றி பொதுமக்களுக்கு சுகாதார வசதி செய்து தர இயலும். எனவே ஜுஜுவாடி கிராமம் சர்வே எண் 714ல் அரசுக்கு சொந்தமான 5.00 ஏக்கர் நிலம் காலியாக உள்ளது. மேற்படி இடத்தில் இரண்டு நுண்ணுயிர் செயலாக்க மையம் அமைக்க ஏதுவாக முன்நுழைவு அனுமதி வழங்க கோரி மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு அனுப்ப மாமன்றம் தீர்மானிக்கலாம்.

மாமன்ற மேயர்
ஒசூர் மாநகராட்சி

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்

தலைமை – திரு.எஸ்.ஏ.சத்யா,
மாமன்ற மேயர், ஒசூர் மாநகராட்சி

| பொருள் எண் | தீர்மான எண் | கூட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1 | 01 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 2 | 02 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 3 | 03 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 4 | 04 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 5 | 05 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 6 | 06 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |

(ஒம்) எஸ்.ஏ.சத்யா
மாமன்ற மேயர்
ஒசூர் மாநகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஒசூர் மாநகராட்சி